### இனிமையான குழந்தைகளே! சத்திய தந்தையிடத்தில் உண்மையாக இருக்கும் போது ஒவ்வொரு அடியும் பல மடங்கு வருமானம் சேமிப்பாகிக் கொண்டே இருக்கும்.

கேள்வி: எந்த பிராப்தியை பகவானைத் தவிர வேறு யாரும் செய்விக்க முடியாது?

பதில்: நமக்கு அமைதி அல்லது சுகம் வேண்டும் என்று மனிதர்கள் விரும்புகின்றனர். அமைதி முக்தி தாமத்தில் கிடைக்கும், சுகம் ஜீவன்முக்திதாமத்தில் கிடைக்கும். ஆக முக்தி மற்றும் ஜீவன் முக்தி இந்த இரண்டு பிராப்திகளையும் பகவானைத் தவிர வேறு யாரும் செய்விக்க முடியாது. குழந்தைகளாகிய உங்களுக்கு இவ்வாறு அலைந்து கொண்டிருக்கும் ஆத்மாக்களின் மீது கருணை வர வேண்டும். பாவம், வழி தேடிக் கொண்டிருக்கின்றனர், அலைந்து கொண்டி ருக்கின்றனர். அவர்களுக்கு வழி காட்ட வேண்டும்.

பாடல்: சத்தியத்தின் வழிப்படி .....

ஓம்சாந்தி. இந்த பாட்டு குழந்தைகளுக்கானது ஏனெனில் சத்திய பாபா கொடுக்கும் சத்தியத்தின் மார்க்கத்தில் குழந்தைகள் தான் நடந்து கொள்கிறீர்கள். சிலர் நல்ல விதமாக நடந்து கொள்கின்றனர். சிலர் பாபா வழிப்படி நடப்பது கிடையாது. யார் அவ்வாறு நடந்து கொள்கிறார் களோ அவர்களே உயர்ந்த பதவி அடைவார்கள். இல்லையெனில் உயர்ந்த பதவி அடைய முடியாது. தந்தை அல்லது நாயகனிடம் உண்மையாக இருக்க வேண்டும், ஏனெனில் அவரது சத்திய வழி கிடைக்கிறது. மற்ற அனைவரும் பொய்யான வழி கொடுக்கின்றனர். மனிதன் மனிதனுக்கு பொய்யான வழி தான் கொடுக்கின்றனர். பொய்யான மாயை, பொய்யான உடல் என்று பாடப்பட்டிருக்கிறது. இங்கு பொய்யோ பொய்யாகவே தான் இருக்கிறது. சத்திய கண்டத் தில் பொய் இருக்காது. அந்த சத்திய கண்டத்திற்காக நீங்கள் முயற்சி செய்து கொண்டி ருக் கிறீர்கள். ஆக குழந்தைகள் தந்தையிடத்தில் மிகவும் உண்மையானவர்களாக இருக்க வேண்டும். இவர் எல்லையற்ற தந்தை ஆவார். உண்மையாக இருப்பதன் மூலம் ஒவ்வொரு அடியிலும் பல மடங்கு செல்வந்தர்களாக ஆகிறீர்கள். பொய்யானவர்கள் செல்வந்தர்களாக ஆக மாட்டார்கள். ஆக தந்தையிடம் பொய் பேசுவது மிகவும் தீங்காகும். எப்போதும் உண்மை யாகவே இருக்க வேண்டும். இல்லையெனில் சத்திய கண்டத்தில் அந்த அளவிற்கு உயர்ந்த பதவி அடைய முடியாது. நல்லது, இது குழந்தைகளுக்கான எச்சரிக்கையாகும்.

இப்போது குழந்தைகள் மற்றவர்களுக்குப் புரிய வைக்கும் முறையை கற்றுக் கொள்ள வேண்டும் - புத்தியற்றவர்களுக்கு எப்படி புரிய வைப்பது? புத்தியற்றவர்கள் என்று ஏன் கூறப்படுகின்றனர்? ஏனெனில் மனிதர்களுக்கு புத்தி கிடையாது. மனித சிருஷ்டியை படைப்பவர் பரமாத்மா என்ற கூறுகின்றனர், ஆக அவர் படைப்பவர் ஆகிவிடுகின்றார். ஆனால் நம்மை படைப்பவர் யார்? என்பது படைப்புகளுக்கு தெரியவில்லை. அமைதி அதாவது சுகத்திற்காக பக்தி போன்றவைகளை செய்கின்றனர். பகவானை அடையாத போது நாம் எல்லாமே இப்படித் தான் செய்தோம். கிருஷ்ணரின் பஜனை செய்தோம், அவரை நினைவு

செய்தோம், அவரை கொண்டாடுவதற்கான வழிபாடு முதலானவை செய்தோம், ஆனால் அவரிடத்தில் என்ன கேட்டோம்? என்பது எதுவும் தெரியாது. நம்மை படைப்பவர் யார்? எதுவும் தெரியாது. எதுவரை தந்தை கிடைக்கவில்லையோ அதுவரை நாம் பல வகையான சாதனை, பக்தி போன்றவைகளை செய்து வந்தோம் என்பதை குழந்தைகளாகிய நீங்கள் அறிவீர்கள். செய்து செய்து என்ன பலன் கிடைத்தது? எதுவும் கிடையாது. உலகம் தமோ பிரதானமாக ஆகியே தீர வேண்டும். பிறகு இவ்வளவு சாதனை (முயற்சி) செய்கிறோமே அதனால் ஏதாவது கிடைக் கிறதா? இல்லையா? என்ற சிந்தனை செய்வது கிடையாது. எதுவும் கிடைப்பதில்லை என்பதை இப்போது புரிந்து கொண்டீர்கள். நமக்கு என்ன வேண்டும்? என்பதும் யாருடைய புத்தியிலும் கிடையாது. நிர்வாணதாமம் செல்வதற்காக நாம் (சாதனை) முயற்சி தவம் செய்து கொண்டி ருக்கிறோம் என்று சந்நியாசிகள் கூறுவர். ஆனால் யாருக்கு வழி தெரியுமோ, அங்கிருந்து வந்திருக் கிறார்களோ அவர்கள் தான் வழி கூற முடியும், வேறு யாரும் வழி கூற முடியாது. யார் வருகிறார்களோ அவர்கள் மறுபிறவி எடுத்தே ஆக வேண்டும். கடைசி வரை மறுபிறவி எடுத்து வர வேண்டும். எதுவரை உலகம் விநாசம் ஆகவில்லையோ அல்லது உலகம் என்ற மரம் இற்றுப் போகவில்லையோ அதுவரை அனைவரும் இருக்க வேண்டும். மனிதர்கள் சிலரை ஜோதி ஜோதியுடன் கலந்து விட்டார், வைகுண்டவாசி ஆகிவிட்டார் அல்லது சொர்க்கத் திற்கு சென்று விட்டார் என்று நினைக்கின்றனர். உண்மையில் இப்போது யாரும் சொர்க்கத் திற்கு செல்லவில்லை. சொர்க்கம் எங்கு இருக்கிறது? நிர்வாணதாமம் எங்கு இருக்கிறது? அங்கு என்ன இருக்கும்? அங்கு சென்று பிறகு எப்போது வருவோம்? என்று எதையும் அறியவில்லை. நீங்கள் அனைத்தையும் வரிசைக்கிரமமாக முயற்சிக்கேற்ப அறிவீர்கள். யார் வந்தாலும் நீங்கள் என்ன விரும்புகிறீர்கள்? குருவிடம் செல்கிறீர்கள் எனில் மனதில் என்ன விரும்பு கிறீர்கள்? என்று கேட்க வேண்டும். உண்மையில் அவர்கள் விரும்பு வதை பிராமண, பிராமணி களாகிய நீங்கள் அறிவீர்கள். எதை விரும்ப வேண்டும்? எந்த விசயத்தை விரும்ப வேண்டும் என்பதையும் யாரும் அறியவில்லை. இங்கு எதுவும் நல்லதாக தோன்றுவது கிடையாது. ஆக இதிலிருந்து விடுபடுவதற்கான முயற்சி செய்கின்றனர். செல்வதற்கான இருப்பிடம் இரண்டு, நிர்வாண தாமம், அது சாந்திதாமம் ஆகும். அங்கு ஆத்மாக் கள் வசிக்கின்றன. நீங்கள் அந்த இருப்பிடத் திற்கு செல்ல விரும்புகிறீர்களா என்ன? குழந்தை களாகிய உங்களுக்கு கருணை ஏற்பட வேண்டும். பாவம் அலைந்து கொண்டே இருக் கின்றனர். வழியை யாரும் அறியவே யில்லை. வழிகாட்டி ஒரே ஒருவர். அவர் அனைவரையும் துக்கத்திலிருந்து விடுவித்து சுகதாமத் திற்கு அழைத்துச் செல்வபர் அல்லது ஜீவன்முக்தி உருவாக்கக் கூடியவர் ஒருவரே. அவர் எதுவரை வரவில்லையோ அதுவரை யாருக்கும் முக்தி, ஜீவன் முக்தி பிராப்தியாக கிடைக்காது. இந்த இரண்டு சொத்துக்களும் ஒரே ஒரு தந்தையிடம் இருக்கின்றன. எதுவரை பகவான் பக்தர் களிடத்தில் வரவில்லையோ பிறகு அந்த பொருளை அடைய முடியாது. சொர்க்கத்தில் சுகம், அமைதி இரண்டும் இருக்கும். அமைதி என்று ஏன் கூறப்படுகிறது? ஏனெனில் அங்கு சண்டை, சச்சரவு போன்றவைகள் நடக்காது. மற்றபடி அசலானது சாந்திதாமம் அதாவது நிர்வாணதாமம். அங்கு அனைத்து ஆத்மாக்களும் அமைதியாக இருக்கின்றன. பிறகு ஆத்மா விற்கு கர்மேந்திரி யங்கள் கிடைக்கின்ற போது பேசுகிறது. ஆக அங்கு சுகம், அமைதி இரண்டும் இருக்கும். செல்வத்தின் மூலம் சுகம் கிடைக்கும். அங்கு (சத்யுகத்தில்) செல்வம் அதிகமாக இருக்கும். இங்கு செல்வம்

இல்லாததால் மனிதர்கள் துண்டு ரொட்டியை அடைவது கூட கடினமாக இருக்கிறது. செல்வம் இருந்தால் விமானம், பெரிய பெரிய மாளிகை போன்ற பொருட்கள் இருக்கின்றன. ஆக செல்வமும் வேண்டும், பிறகு அமைதியும் வேண்டும். நோயற்ற உடலும் வேண்டும். இவை அனைத்தையும் கொடுக்கக் கூடியவர் தந்தை. இந்த கலியுகம் துக்கதாமம் என்று புரிய வைக்கப்படுகிறது. புது உலகம் சுகதாமம். அங்கு துக்கம் இருக்காது. தூய்மை, சுகம், அமைதி அனைத்தும் இருக்கிறது. மற்றொன்று முக்திதாமம். அங்கு யாரும் சதா இருக்க முடியாது. மறுபிறவி எடுத்து நடிப்பு அவசியம் நடிக்க வேண்டும். நடிப்பு நடிக்க வரும் வரை பரந்தாமத்தில் இருப்பர். உண்மையான இனிய வீட்டை நினைவு செய்வர், நாடகத்தில் எப்போதும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் தான் இருப்பர். இந்த நாடகத்தில் இத்தனை நடிகர்கள் இருக்கின்றனர், இதுவோ அழிவற்ற, ஏற்கெனவே உருவாக்கப்பட்ட நாடகமாகும். குறிப்பிட்ட எண்ணிக்கை இருக்கிறது, பாரதத்தில் 33 கோடி தேவதைகளின் எண்ணிக்கை இருக்கிறது. இந்த நேரத்தில் பலர் மத மாற்றலாகி சென்று விட்டனர். ஆக யாராவது முதல் முறையாக வருகிறார் எனில் உள்ளத்தில் என்ன ஆசை இருக்கிறது? என்ன விரும்புகிறீர்கள்? என்று கேட்க வேண்டும். தரிசனத்தினால் எந்த நன்மையும் கிடைக்காது. குருவிடம் ஏதாவது ஆசையுடன் செல்வர். ஏதாவது கிடைக்கும் என்ற ஆசை இருக்கும். ஆசிர்வாதம் அடைய வேண்டும், நான் இந்த விசயத்தில் வெற்றி பெற வேண்டும், நான் சதா அமைதியுடன் இருப்பதற்கான வழி கூறுங் கள், மனம் சதா சஞ்சலமாக இருக்கிறது என்று சிலர் கூறுவர். அமைதி பரந்தாமத்தில் கிடைக்கும் என்று கூறுங்கள். ஒன்று சாந்திதாமம், மற்றொன்று சுகதாமம், மூன்றாவது துக்க தாமம். நீங்கள் என்ன விரும்புகிறீர்கள்? இந்த மாதிரியான முயற்சி செய்யுங்கள் என்று பிறகு நாம் கூற வேண்டும். சாதனை என்றாலும் முயற்சி என்றாலும் ஒரே விசயமாகும். வேறு ஒரு இடம் செல்வதற்காக அதாவது திரும்பி பரந்தாமம் செல்வதற்காக பக்தர்கள் சாதனை செய் கின்றனர். மோட்சம் யாரும் அடைய முடியாது. இது ஏற்கெனவே உருவாகப்பட்ட நாடகமாகும். சந்நியாசிகள் தங்களது சந்நியாசி தர்மத்திற்கு வந்தே ஆக வேண்டும். கிறிஸ்தவ தர்மம் மீண்டும் கிறிஸ்து மூலம் அவசியம் ஸ்தாபனை ஆகும். சத்யுகத்தில், புது உலகில் தூய்மை, சுகம், அமைதி அனைத்தும் இருக்கும், அது சுகதாமம், சிவாலயம் என்று கூறப்படு கிறது. இது வைஷ்யாலயம் (விகாரிகள் நிறைந்த உலகம்) ஆகும். நீங்கள் என்ன விரும்பு கிறீர்கள்? அமைதி விரும்புகிறீர்களா? அது சாந்திதாமத்தில் கிடைக்கும். அதுவும் எதுவரை சுகதாமத்தினுடையவர் களின் அதாவது தேவி தேவதைகளின் பாகம் இருக்கிறதோ அதுவரை கிடைக்கும். பிறகு வரிசைக்கிரமமாக நடிப்பதற்கு வர வேண்டியிருக்கும். நீங்களும் முயற்சி செய்தீர்கள் எனில் வைகுண்டத்திற்குச் செல்வீர்கள். பாரதம் வைகுண்டமாக இருந்தது, இதை கூறிவிட வேண்டும். ஆஸ்தி தந்தையிடமிருந்து தான் கிடைக்கிறது. அவரே வந்து குழந்தை களுக்கு தனது அறிமுகம் கொடுக்கின்றார். தந்தையே இல்லையெனில் குழந்தைகள் எப்படி அறிந்து கொள்ள முடியும்? நாம் பகவானின் குழந்தைகள் தான் என்று மட்டுமே நினைக் காதீர்கள். ஒருவேளை இவ்வாறு கூறினால், பிறகு நாங்கள் கேட்போம் - பகவான் எதை படைக் கின்றார்? அவர் சொர்க்கத்தை படைக்கின்றார். பிறகு நீங்கள் ஏன் நரகத்தில் ஏமாற்ற மடைந்து கொண்டிருக் கிறீர்கள்? 84 பிறவிகளைப் பற்றி கூற வேண்டும். பகவான் உங்களை சொர்க்கத் திற்கு அனுப்பி வைத்தார், பிறகு 84 பிறவிகள் எடுத்து இப்போது நரகத்திற்கு வந்து விட்டீர்கள். இப்போது 84 பிறவிகள் முடித்து விட்டீர்கள். உங்களுக்கு இது

தெரியாது, நாங்கள் கூறுகிறோம். நீங்கள் முதலில் சொர்க்கத்தில் இருந்தீர்கள், பிறகு 84 பிறவிகள் எடுத்தீர்கள். இப்போது மீண்டும் தந்தை மற்றும் சொர்க்கத்தை நினைவு செய்யுங்கள். தாமரை மலர் போன்று தூய்மையாக இருக்க வேண்டியிருக்கும். சந்நியாசிகளுக்கும் புரிய வைக்க வேண்டும், உங்களுடையது ஹடயோகம். இது இராஜயோகம். இல்லறத்தில் இருந்தாலும் தாமரை மலர் போன்று இருக்க வேண்டும். இது இல்லற மார்க்கமாகும். உங்களது மார்க்கம் தனிப்பட்டது, துறவற மார்க்க மாகும். இது ஜீவன் முக்தி அடைவதற்கான இல்லற மார்க்கமாகும். நமக்கும் பாபா புரிய வைத்திருக் கின்றார். இப்போது நீங்கள் தந்தையை நினைவு செய்தால் கடைசி நிலை நல்ல நிலையாக ஆகிவிடும். தந்தையை நினைவு செய்யும் போது தான் விகர்மங்களின் சுமைகள் அழியும். இந்த இரண்டு இடத்தில் தான் சுகம், அமைதி அடைய முடியும். உங்களுக்கு என்ன வேண்டும்? சொர்க்கத்திற்கு செல்ல விரும்புகிறீர்களா என்ன?

தாயும் நீயே, தந்தையும் நீயே.. என்று பாடப்படுகிறது. உங்களுக்கு அளவு கடந்த சுகம் தேவை யெனில் இல்லறத்தில் இருந்தாலும் இராஜயோகம் கற்றுக் கொள்ளுங்கள். தூய்மை யாகவும் இருக்க வேண்டும், இரண்டு பக்கமும் (சமநிலையில்) இருக்க வேண்டும், பந்தனத்தில் கட்டுண்டு இருக்கக் கூடாது. சொர்க்கத்திற்கு எஜமானர் களாக ஆகக் கூடியவர் இல்லை யென்றாலும் முயற்சியை விட்டு விடக் கூடாது, தந்தை மற்றும் ஆஸ்தியை நினைவு செய்ய வேண்டும், மேலும் தூய்மையாக இருக்க வேண்டும். நான் சாதுவாக இருக்கிறேன், ஆனாலும் எனக்கு முழுமையான வழி தெரியாது, உங்கள் மூலம் வழி கிடைக்கும் என்று கேள்விப் பட்டேன். இப்போது என்ன செய்வது? என்று ஒரு சந்நியாசி எழுதியிருந்தார். நான் உங்களுடைய வராக ஆகிவிட்டால் என்னை பின்பற்றுபவர்கள் சகிதம் வந்து விடுவேன். ஆனால் இவ்வாறு யாரும் ஆகிவிட முடியாது. நான் என்ன கூறினாலும் பின்பற்றுபவர்கள் கேட்பார்கள் என்று அவர்கள் நினைக்கின்றனர். ஆனால் அவ்வாறு செய்ய மாட்டார்கள். பி.கு பெயரைக் கேட்டதும் இவருக்கு மந்திரம் போட்டு விட்டார்கள் என்று கூறுவர். சிலர் வரவும் செய்கின்றனர், மற்றபடி நாம் எந்த சந்நியாசியின் ஆசிரமத்தையும் கைபற்றுபவர்கள் கிடையாது. இந்த மார்க்கம் நல்லது என்று யாராவது புரிந்து கொள்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள், நாம் அவரது ஆசிரமத்தை பராமரிப்போமா (ஏற்று நடத்துவோமா) என்ன? ஆம், சகோதரிகள் சென்று சொற்பொழிவு செய்வார்கள், ஒருவேளை பிடித்திருந்தால் இருப்பார் கள். மற்றபடி ஆசிரமத்தை வைத்து நாம் என்ன செய்யப் போகிறோம்? நான் வந்து சிறிது அறிவுரைளை பெறலாமா? என்று எழுதியிருந்தார். அவ்வாறெனில் எங்கு செல்வதற்காக நீங்கள் சாதனை செய்கிறீர்கள்? எந்த இலட்சியத்துடன்? யாரை சந்திக்க விரும்புகிறீர்கள்? எங்கு செல்ல விரும்புகிறீர்கள்? என்று எழுத வேண்டும். நீங்கள் ஹடயோகி சந்நியாசிகள், நம்முடையது இது இராஜயோகமாகும். இதை கற்பிக்கக் கூடியவர் பரம்பிதா பரமாத்மா. இந்த கலியுகம் துக்கதாமம், சத்யுகம் சுகதாமம் ஆகும். கலியுகத்தில் பாருங்கள் பல தர்மங்கள் உள்ளன, எத்தனை சண்டை சச்சரவுகள் நடக் கின்றன! சத்யுகத்தில் ஒரே ஒரு தர்மம் தான். அது சதோ பிரதான உலகம். அரசர் எவ்வழியோ மக்கள் அவ்வழி, சதோ பிரதானமாக இருந்தனர். இங்கு அரசனைப் போன்று பிரஜைகளும் தமோ பிரதானமாக இருக்கின்றனர். இது முட்கள் நிறைந்த காடாகும். அது மலர்கள் நிறைந்த பூந்தோட்டமாகும். ஆக இரண்டே மார்க்கம்

தான் இருக்கிறது. ஹடயோகம் மற்றும் இராஜ யோகம். சொர்க்கத்திற்காக இந்த இராஜயோகம், சொர்க்கத்தில் இராஜவிற்கெல்லாம் இராஜா வாக ஆவீர்கள். சொர்க்கத்தை ஸ்தாபனை செய்யக் கூடியவர் பரம்பிதா பரமாத்மா. அவரே இராஜயோகம் கற்பிக்கின்றார். நாம் சந்நியாசத்தில் தான் இருப்போம் என்று சந்நியாசிகள் கூறினால் ஞானம் அடைய முடியாது. இல்லற மார்க்கத்தில் இருக்க வேண்டும். இது ஒரு நியமமாகும், இதனை விடுத்து சென்று விட்டனர், அவர்களுக்கும் நன்மை செய்ய வேண்டும். முதலில் நீங்கள் நல்ல முறையில் புரிந்து கொள்ளுங்கள், பிறகு வீட்டிலிருந்து தானம் ஆரம்பிக்க வேண்டும். நீங்கள் மனைவியை விட்டு விட்டு வந்து விட்டீர்கள். ஒருவேளை பால பிரம்மச் சாரியாக இருந்தால் தாய், தந்ûயை விட்டு வந்திருப்பார்கள். அவர்களுக்கும் புரிய வைக்க வேண்டும். நியமங்களை முதலில் புரிய வைக்க வேண்டும்.

பழைய உலகை புதியதாக ஆக்குவது ஒரே ஒரு தந்தையின் காரியமாகும். தந்தை பரந்தாமத் திலிருந்து வர வேண்டியிருக்கிறது. அவர் தூய்மை இல்லாதவர்களை தூய்மை யாக்குபவர், நரகத்தை சொர்க்கமாக ஆக்குபவர். சொர்க்கத்தில் தேவி தேவதைகள் இருக் கின்றனர். மற்ற அனைவரும் நிர்வாணதாமத்தில் இருப்பர். அனைவருக்கும் சுகம், சாந்தி கொடுக்கக் கூடியவர் அந்த ஒருவரே ஆவார். ஒரு தர்மத்தை ஸ்தாபனை செய்து மற்ற அனைத்து தர்மங்களையும் அழிப்பதற்காக தந்தை வருகின்றார். மற்ற அனைவரும் சென்று பரந்தாமத்தில் வசிப்பார்கள். இது கடைசி நேரமாகும். அனைத்து கணக்கு வழக்குகளையும் முடித்துக் கொண்டு திரும்பி வீட்டிற்குச் செல்வார்கள். அனைத்து ஆத்மாக்களுக்கும் அவரவர் களுக்கான பாகம் கிடைத் திருக்கிறது. சிலர் எத்தனை பிறவி எடுப்பார்கள் மற்றும் சிலர் எத்தனை பிறவி எடுத்து நடிப்பு நடிக்கின்றனர். அனைவரும் தமோ பிரதானமாக ஆகியே தீர வேண்டும். மற்றபடி யாரும் திரும்பி செல்ல முடியாது. மோட்சம் கிடைப்பதும் கிடையாது. இருப்பது முக்தி, ஜீவன் முக்தியாகும், நாம் ஜீவன்முக்திக்காக முயற்சி செய்கிறோம். இதில் முக்தியும் வந்து விடுகிறது. நீங்கள் முக்தியை விரும்புகிறீர்கள் எனில் நல்லது தந்தையை நினைவு செய்தால் விகர்மங்கள் விநாசம் ஆகிவிடும். மேலும் நீங்கள் தந்தையிடம் சென்று விடுவீர்கள். இந்த ஒரே ஒரு வழியை சுயம் தந்தை கூறுகின்றார் மற்றும் சுயதரிசன சக்கரத்தை சுற்றிக் கொண்டே இருக்க வேண்டும். படிப்பு படித்துக் கொண்டே இருந்தால் சொர்க்கத்திற்கு வந்து விடுவீர்கள். ஆக சந்நியாசிகள் மீண்டும் இல்லற விவகாரத்திற்குச் செல்ல வேண்டியிருக்கும், தைரியம் தேவை. ஒரு ஞானேஸ்வர் கீதையில் தான் ஞானம் இருக்கிறது, அதில் இது எழுதப்பட்டிருக்கிறது - ஒரு குழந்தையை பெற்றெடுத்த பின்பு சந்நியாசம் செய்து விடுங்கள், குலம் விருத்தியடையும். பிறகு யாரும் பால பிரம்மச்சாரிகளாக இருக்க முடியாது. பால பிரம்மச்சாரியான பீஷ்மபிதாவிற்கு அதிக மரியாதை இருக்கிறது. ஆனால் மனிதர்கள் ஒருவருக்கொருவர் மீது நம்பிக்கை வைப்பது கிடையாது. இல்லறத்தில் இருந்து கொண்டே விகாரத்தில் செல்லாமல் இருப்பது என்பது இயலாத காரியம் என்று நினைக்கின்றனர். ஆனால் அவர்களுக்கு சர்வசக்திவான் பகவானின் உதவி கிடையாது. இராஜயோகம் கற்பித்து சொர்க்க ஸ்தாபனை செய்யுமளவிற்கு யாரிடத்திலும் சக்தி கிடையாது. அனைவரையும் துக்கத்திலிருந்து விடுவித்து சுகத்திற்கு அழைத்துச் செல்வது - ஒரு பரமாத்மாவைத் தவிர வேறு யாரும் செய்ய முடியாது. இரண்டு வாசலுக்குக்கான சாவி ஒரு தந்தையிடம் இருக்கிறது.

சொர்க்கத்தின் கதவும் திறக்கிறது எனில் முக்திக்கான கதவு திறக்கப்படுகிறது. முக்திக்குச் செல்லாமல் சொர்க்கத் திற்கு எப்படி செல்ல முடியும்? இரண்டு கதவும் ஒன்றாக திறக்கப்படுகிறது. நல்லது.

இனிமையிலும் இனிமையான, தேடிக் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு, தாய் தந்தையாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) முக்திக்காக தந்தையை நினைவு செய்து விகர்மங்களை விநாசம் செய்ய வேண்டும், மேலும் ஜீவன் முக்திக்காக சுயதரிசன சக்கரதாரி ஆக வேண்டும், படிப்பு படிக்க வேண்டும்.

2) கருணையுள்ளம் உடையவராகி அலைபவர்களுக்கு வீட்டிற்கான வழியைக் கூற வேண்டும். முக்தி மற்றும் ஜீவன் முக்திக்கான ஆஸ்தியை ஒவ்வொருவருக்கும் தந்தையின் மூலம் கொடுக்க வைக்க வேண்டும்.

வரதானம் : ஆன்மீகத் தன்மையில் இருந்துக் கொண்டு சுயமரியாதை என்ற இருக்கையில் அமரக்கூடிய சதா சுகமானவர், அனைத்து பிராப்திகளில் சொரூபமானவர் ஆகுக.

ஒவ்வொரு குழந்தைகளிடத்திலும் ஏதாவதொரு குணம் விசேஷமானதாக இருக்கும். அனைவரும் விசேஷமானவர்களாகவும், குணம் நிறைந்தவராகவும், மகானாகவும், மாஸ்டர் சர்வசக்திவானாகவும் இருக்கிறார்கள், இந்த ஆன்மீக நஷா சதா நினைவில் இருப்பது – இதைத் தான் சுயமரியாதை என்று சொல்லப்படுகிறது. இந்த சுயமரியாதையில் அபிமானம் (ஈகோ) வர முடியாது. அபிமானம் என்ற இருக்கை என்பது முட்கள் நிறைந்த இருக்கையாகும். ஆகையால் அதன் மீது அமருவதற்காக முயற்சி செய்யாதீர்கள். ஆன்மீகத்தன்மையில் இருந்து சுய மரியாதை என்ற இருக்கையில் அமர்ந்து விட்டீர்கள் என்றால் சதா சுகமானவராகவும், சதா உயர்ந்தவராகவும், சதா அனைத்து பிராப்திகளின் சொரூபத்தை அனுபவம் செய்துக் கொண்டே யிருப்பீர்கள்.

சுலோகன்: தனது சுபபாவணையோடு ஒவ்வொரு ஆத்மாவிற்கும் ஆசீர்வாதம் கொடுக்கக்கூடிய மற்றும் மன்னிக்கக்கூடியவர் தான் நன்மை செய்யக்கூடியவர் ஆவர்.